ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1400/24 - 2005 ජූලි 08 වැනි සිකුරාදා - 2005.07.08
*1400/24 ஆம் இலக்கம் – 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.-21/78*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய, 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 24(அ) என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 24(ஆ) என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதான எந்தக் கருதப்பட்ட பல்கலைக்கழகக் கட்டளையின் நியதிகளின்படி களனி பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அழகியல் கற்கைகள் நிறுவகம் தாபிக்கப்பட்டதோ அந்தக் கருதப்பட்ட பல்கலைக்கழகக் கட்டளையை 2005.06.30 ஆந் திகதியிலிருந்து இத்தால் இல்லாதொழிக்கின்றேன்.

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
2005, யூன் 29.

7-591/1

---

*ச.வ.பீ. 21/78*

**1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

21ஆம் பிரிவின் கீழான கட்டளை

சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், அரசியலமைப்பின் 44ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பயனைக் கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் இக்கட்டளையின் மூலம்_

(அ) கட்புலக் கலை மற்றும் அரங்கேற்றற் கலை ஆகிய பயிலும் பிரிவுகளில் உயர் கல்வியை வழங்குதல், ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுக்கும் அவற்றின் அழகியல் மற்றும் பிரயோகத் தோற்றங்கள் தொடர்பில் சிறந்த தராதரத்தை எய்துவதற்கு இக் கலைகளை மேம்படுத்துவதற்கும் எனப் பல்கலைக்கழகம் ஒன்றை 2005, யூலை 01 இலிருந்து வலுவுக்கு வருமாறு தாபிக்கின்றேன்.

(ஆ) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு "கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்" என்று பெயர் மகுடத்தைக் குறித்தொதுக்குகின்றேன்;

(இ) கொழும்பு, நிர்வாக மாவட்டத்திற்குள் அத்தகைய பல்கலைக்கழகத்தின் அமைவிடமாக இருக்க வேண்டிய இடத்தைக் குறித்துரைக்கின்றேன்.

(ஈ) பல்கலைக்கழகம், தெரிவுசெய்யப்பட்ட கற்கைத் துறைகளில் தனித்துவமெய்தலை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புடன் நன்கு நிலைநாட்டப்பட்ட பொதுக் கல்வியை மாணவர்க்ளுக்கு வழங்கும் குறிக்கோளுடன் பரந்தளவிலான தொடர்புடைய கற்கைத் துறைகளுடன் சம்பந்தப்பட்ட பாடநெறிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன்.

(உ) அத்தகைய பல்கலைக்கழகம், இதற்கான அட்டவணையில், முறையே நிரை 1 நிரை II ஆகியவற்றில் தரப்பட்ட பீடங்களையும் படிப்புத் துறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன்.

| *நிரை I*<br>பீடம் | *நிரை II*<br>படிப்புத் துறைகள் |
|---|---|
| 1. கட்புலக் கலைப்பீடம் | 1. ஓவியத்துறை;<br>2. சிற்பத் துறை;<br>3. கட்புலத் தொடர்பாடல் வடிவமைப்புத்துறை;<br>4. பல்லினத்துறைசார்ந்த வடிவமைப்புத் துறை;<br>5. அச்சுத் தயாரிப்புத் துறை;<br>6. புடவைகள் மற்றும் அணித்து பொருட்கலைகள் துறை;<br>7. மட்பாண்டத் துறை;<br>8. வரலாறு மற்றும் கலைகள் கோட்பாட்டுத் துறை;<br>9. பல்லூடகக் கலைத்துறை; |
| 2. நடன, நாடகப்பீடம் | 1. கண்டியல் நடனத்துறை;<br>2. கீழைத்தேய நடனத் துறை;<br>3. சப்பிரகமுவா நடனத் துறை;<br>4. வாத்திய இசைத் துறை;<br>5. இந்திய மற்றும் ஆசிய நடனத்துறை;<br>6. நாடக அரங்கு, அபிநய நடன, நவீன நடனத்துறை;<br>7. வரலாறு, நடன நாடகக்கோட்பாட்டுத் துறை; |
| 3. இசைப்பீடம் | 1. வட இந்திய மரபு நயம்பயந்த இசைத் துறை;<br>2. இன இசையியல் துறை;<br>3. பிரயோக இசைத் துறை;<br>4. கர்நாடக இசைத் துறை;<br>5. மேலைத்தேய இசைத் துறை;<br>6. ஒப்புநோக்கு இசைத்துறை. |

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
2005.யுன் 29.

7-591/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.